DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திங்கள்கிழமை 06 ம் நாள் சாட்சியாகிய அப்துல் வகாப் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அப்துல் வகாப் | வயது | 74 |
| த/பெ. | அப்துல் கனி | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | சொந்த தொழில் |
| சமயம் | | தாலுக்கா | |

**C.C.45/2024**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் .)

**முதல் விசாரணை 06.01.2025 அ.சா.1**

1. நான் அரக்கோணத்தில் வசித்து வருகிறேன். 24.08.2023 ம் தேதி காலை 08.00 மணிக்கு மசூதி தெருவில் உள்ள எனது வீட்டிடம் இறந்த எனது மனைவியின் நினைவாக மெழுகுவர்த்தி ஏற்றி வணங்கிகொண்டிருந்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரி தபீர் தேவிடியா பையா , சாவா மாட்டியா என்று என்னை பார்த்து அசிங்கமாக பேசினார்.

2. என்னை இப்பவே சாகடிப்பதாக சொல்லி வாட்டார் கேன் தூக்கும் மெட்டல் handle–லால் என்னை தலையின் முன்பக்க நெற்றி இடது பக்கமாக தாக்கினார். பின் மண்டையிலும் தாக்கினார். நான் மயக்க நிலைக்கு சென்றேன் அப்போது எனது இடது பக்க மார்பிலும் handle–லால் அடித்தார். எனது காலிலும எட்டி உதைத்தார். எனது கையில் இருந்த ஆவணங்களை பிடுங்க முயற்சி செய்தார்.

3. எனது நண்பருக்கு போன் செய்து அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். என்னை மருத்துவமனையில் அரக்கோணம் நகர போலீசார் துணை ஆய்வாளர் தினேஷ் வந்து விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது நான் கொடுத்த புகார். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. என்னை திருத்தணி அரசு மருத்துவமனைக்கு ஸ்கேன் எடுக்க அனுப்பினார்கள். எனது கண்ணில் அடிப்பட்டு இருந்ததால் அரக்கோணம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 9 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சென்னை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக என்னை அனுப்பினார்கள். போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

அரசு வழக்கறிஞர் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய கால அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.